ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2151/60 - 2019 දෙසැම්බර් මස 01 වැනි ඉරිදා - 2019.12.01

*2151/60 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதில் உள்ள அட்டவணையில் I, II மற்றும் III ஆம் நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பண்டங்கள் மீதும், மேற்படி சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2019, மே மாதம் 13 ஆந் திகதிய 2123/ 5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2019, யூலை மாதம் 10 ஆந் திகதிய 2131/ 29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2019, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதிய 2145/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட 2019, மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/ 9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் அட்டவணையில் உள்ள பண்டங்கள் மீது அதே அட்டவணையில் IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரி வீதங்களுக்காக, இவ்வட்டவணையில் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி வரி வீதங்கள் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் பதிலீடு செய்யப்படல் வேண்டுமென, இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை*
*அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, திசெம்பர் 01.*

1A — PG 4780 - 567 (2019/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

| இ.மு. தலைப்பு I | இ.மு. குறியீடு II | விபரம் III | உற்பத்தி வரி IV |
|---|---|---|---|
| 24.02 | | **புகையிலையிலான அல்லது புகையிலைக்குப் பதிலானவையிலான சுருட்டுக்கள், செருட்டுகள் சிகாரில்லோக்கள், சிகரெட்கள் என்பன** | |
| | 2402.20 | புகையிலையிலான சிகரட்டுகள் | |
| | 2402.20.20 | சிகரட்டுகள் ஒவ்வொன்றும் 60 மி. மீற்றருக்கு குறைவான நீளத்தைக் கொண்டவை | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 13,360/= |
| | 2402.20.30 | சிகரட்டுகள் ஒவ்வொன்றும் 60 மி. மீற்றருக்கு மேற்பட்ட நீளமுடைய ஆனால் 67 மி. மீற்றருக்கு மேற்படாத நீளத்தைக் கொண்டவை | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 22,300/= |
| | 2402.20.40 | சிகரட்டுகள் ஒவ்வொன்றும் 67 மி. மீற்றருக்கு மேற்பட்ட நீளமுடைய ஆனால் 72 மி. மீற்றருக்கு மேற்படாத நீளத்தைக் கொண்டவை | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 37,650/= |
| | 2402.20.50 | சிகரட்டுகள் ஒவ்வொன்றும் 72 மி. மீற்றருக்கு மேற்பட்ட நீளமுடைய ஆனால் 84 மி. மீற்றருக்கு மேற்படாத நீளத்தைக் கொண்டவை | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 43,100/= |
| | 2402.20.60 | சிகரட்டுகள் ஒவ்வொன்றும் 84 மி. மீற்றருக்கு மேற்பட்ட நீளமுடையவை | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 48,350/= |

12-558

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.